**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.64
https://ngmtamil.in/

# தமிழரின் வாழ்வியலில் பெருஞ்சோற்றுநிலை

**முனைவர் ஆ. உமாராணி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பிஷப் அப்பாசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரேஸ்கோர்ஸ், கோயம்புத்தூர் 641 018, பேசி 75983 37217, மின்னஞ்சல் uma.eunic@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

அகம் மற்றும் புறம் எனும் இரு பெரும் வாழ்வியல் நெறிகளைக் கொண்டிருந்த சங்க காலத் தமிழர்கள் இவ்விரு நிலைகளிலும் அறத்தை நிலையான சமூக மதிப்பாகவும் வாழ்வியல் நெறியாகவும் கொண்டிருந்தனர். வாளும் வேலும் ஓங்கும் போர் முழங்கும் களத்திலும் நெறிதவறா மாண்பை மறவர்கள் வெளிப்படுத்த முனைந்துள்ளனர். அதனை இலக்கியங்களும் இலக்கணங்களும் புறத்துறைகள் வாயிலாக வெளிப்படுத்துகின்றன. அத்தகு புறத்துறைகளுள் ஒன்றாக பெருஞ்சோற்றுநிலை அமைகின்றது. பெருஞ்சோற்றுநிலை என்பது சங்ககாலத் தமிழர்களின் உயர்ந்த வாழ்க்கை நெறியையும் வீரத்தையும் மனிதநேயத்தையும் வெளிப்படுத்தும் சமூகச் சடங்காகும். விருந்தோம்பலின் மாற்று வடிவமாக அமையும் பெருங்சோற்றுநிலை, மறவர்களின் மற மாண்பிற்கு அரசு அளிக்கும் மதிப்பாக அமைகின்றது. போர்க்களத்திலும் விருந்தோம்பும் பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிக்குச் சான்றாக அமையும் பெருஞ்சோற்று நிலையின் பரிமாணங்களை சங்க இலக்கியமான புறநானூற்றை எல்லையாகக் கொண்டு தொகுத்தளிக்குமாறு **தமிழரின் வாழ்வியலில் பெருஞ்சோற்று நிலை** எனும் இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**

பெருஞ்சோற்றுநிலை, புறத்துறை, புறநானூறு, வாழ்வியல்

**முன்னுரை**

பெருஞ்சோற்றுநிலை, தமிழரின் விருந்தோம்பல் மரபின் முக்கியத்துவத்தையும் பண்பாட்டின் பெருமையையும் உணர்த்தும் சிறப்புமிக்க புறத்திணைத் துறையாகும். சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள புறநானூறு, தமிழர்களின் அரசியல், சமூகப் போரியல் மற்றும் அறவாழ்வை வெளிப்படுத்தும் சிறந்த புற இலக்கியமாகும். இதில் இடம்பெற்றுள்ள துறைகளுள் ஒன்றான பெருஞ்சோற்றுநிலை, தமிழர்களின் விருந்தோம்பல் பண்பையும், வீரர்களுக்குக் காட்டிய

மரியாதையையும் எடுத்துரைக்கின்றது. மன்னரும் மறவர்களும் ஒன்றாக அமர்ந்து உண்ணும் உணவுசார் பண்பாட்டின் அடையாளமாக பெருஞ்சோற்று நிலை திகழ்கின்றது என்பதனை புறநானூற்றின் வாயிலாக நிறுவுதல் **தமிழரின் வாழ்வியலில் பெருஞ்சோற்று நிலை** எனும் இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாக அமைகின்றது.

**வஞ்சித்திணையும் பெருஞ்சோற்று நிலையும்**

பகைவர் நாட்டைத் தன்வயப்படுத்த அல்லது தன் நாட்டை விரிவாக்கக் கருதி, போர் தொடுத்துச் செல்லும் வீரர்களின் ஒழுக்கத்தைக் கூறுவது வஞ்சித்திணை ஆகும். வஞ்சித்திணையின் துறையாக அமையும் பெருஞ்சோற்று நிலையை,

**“இயங்கு படை அரவம் எரி பரந்து எடுத்தல்**

**------------------**

**பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்**

**வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்**

**குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்**

**அழி படை தட்டோ ர் தழிஞ்சியொடு தொகைஇ**

**கழி பெருஞ் சிறப்பின் துறை பதின்மூன்றே”**

**(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், பா.எ 7)**

எனும் நூற்பா எடுத்துரைக்கின்றது.

**பெருஞ்சோற்றுநிலை**

"பெருஞ்சோறு" என்பது மிகுதியான உணவு அல்லது பெருவிருந்து என்று பொருள்படும். "நிலை" என்பது நிகழ்வு அல்லது சூழல் என்பதாகும். எனவே, பெருஞ்சோற்றுநிலை என்பது அரசன் தனது வீரர்களுக்கு அளிக்கும் பெருவிருந்தைக் குறிக்கும் புறத்திணைத் துறையாகும். போருக்குச் செல்லும் முன்போ அல்லது போரில் வெற்றி பெற்று வந்த பின்னரோ, அரசன் தனது மறவர்களுக்கு அளிக்கும் பெருவிருந்தைப் "பெருஞ்சோற்றுநிலை" என்பர். இது வீரர்களின் வீரத்தைப் பாராட்டுவதோடு, தமிழர்களின் விருந்தோம்பல் மற்றும் கொடைப்பண்பையும் எடுத்துக்காட்டுகிறது. இளம்பூரணர் இதனை,

**"அரசன் தன்னோடு பொருதற்கு எழுந்த வீரர்க்குப் பெருஞ்சோறு கொடுக்கும் நிலை"**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**(இளம்பூரணர், உ.ஆ, தொல்காப்பியம், பொருளதிகாரம், பா.7)**

என விளக்குகிறார்.

**பெருஞ்சோற்றுநிலையின் சிறப்புகள்**

விருந்தோம்பல் பண்பு : தமிழர்கள் விருந்தினரைப் போற்றும் பண்பினை உயர்வாகக் கருதினர். வீரர்களுக்கான விருந்து விருந்தோம்பலின் உச்சநிலையாக அமைகின்றது.

வீரர்களுக்கான மரியாதை : நாட்டைக் காக்க உயிர்த் தியாகம் செய்ய முனைந்த மறவர்களை அரசன் உணவுப் பண்பாட்டால் கௌரவிக்கும் நிகழ்வாக அமைகின்றது.

அரசனின் கொடைப்பண்பு : செல்வத்தை மக்களோடு பகிர்ந்து கொள்ளும் தன்மையைப் பெருஞ்சோறு எடுத்துக்காட்டுகிறது.

ஒற்றுமை உணர்வு : அரசனும் வீரர்களும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தும் நிலை சமூக சமத்துவ உணர்வை வெளிப்படுத்துகிறது.

அறநெறி வெளிப்பாடு : போர்ச்சூழவுக்கு மத்தியிலும் மனிதநேயத்தைப் பேணிய தமிழர் பண்பாட்டை கொட்சிப்படுத்துகின்றது.

புறநானூற்றில் பெருஞ்சோற்றுநிலை

பெருஞ்சோற்று நிலை புறநானூற்றில் 2, 292 ஆகிய இரு பாக்களில் வெளிப்படுகின்றது. அதனை,

1. பாரதப்போரில் பெருங்சோறிட்டவன்
2. பெருஞ்சோற்றுக் களத்தில் பூசல்

எனும் பொருண்மைகளின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பெறுகின்றது.

**பாரதப் போரில் பெருஞ்சோறிட்டவன்**

சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பெருஞ்சோற்று நிலையின் அடையாளமாக அறியப் பெறுகின்றான். இச்சேர மன்னன் உதியன் என்றும், உதியஞ்சேரல் என்றும், உதியஞ்சேரலன் என்றும் அழைக்கப்பட்டான். இச்சேரமன்னன் பஞ்ச பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே நிகழ்ந்த பாரதப் போரில் இருதிறத்தார்க்கும் உணவு அளித்ததாக புறானூறு கூறுகின்றது. பாரதப்போர் உண்மையிலே நடைபெற்றதா, என்பது இன்றும் ஆய்வுக்குரிய பொருளாக இருக்கும் நிலையில் இவன் பாரதப் போரில் ஈடுபட்டவர்களுக்குப் பெருமளவில் உணவளித்ததால் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்று அழைக்கப்பட்டான் என்றும் கருதப்படுகிறது.

நிலம், வானம், காற்று, தீ, நீர் என்ற ஐம்பெரும் பூதங்களைப் போல் பொறுமை, ஆராய்ச்சி, வலிமை, அழிக்கும் ஆற்றல், அருள் ஆகியவை உடையவன் என்றும் பாரதப்போரில் பாண்டவர்களுக்கும் கௌவரவர்களுக்கும் பெருமளவில் உணவளித்தான் என்றும், கிழக்குக் கடலுக்கும் மேற்குக் கடலுக்கும் இடையே உள்ள தமிழகம் இவனுக்கு உரியது என்றும், இமயமும் பொதியமும் போல் இவன் சோர்வின்றி நிலைபெற்று வாழவேண்டும் என்றும் முடிநாகனார் உதியன் சேரலாதனை,

**"மண் திணிந்த நிலனும்,**
**.........**

**அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ,**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
**ஈரைம்பதின் மரும்பொருது, களத்து ஒழியப்**
**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!**
**பொற்கோட்டு இமயமும், பொதியமும், போன்றே!"**

**(புறநானூறு, பா.2)**

எனும் பாவில் வாழ்த்துகிறார்.

**பெருஞ்சோற்றுக் களத்தில் பூசல்**

விரிச்சியூர் நன்னாகனார் எனும் புலவர் பெருஞ்சோற்றுக் களத்தில் நிகழ்ந்த பூசலை சீர்செய்வதாக,

**"வேந்தற்கு ஏந்திய தீந்தண் நறவம்**
**யாம்தனக்கு உறுமறை வளாவ, விலக்கி,**
**வாய்வாள் பற்றி நின்றனென்' என்று,**
**சினவல் ஓம்புமின் சிறுபுல் லாளர்!**
**ஈண்டே போல வேண்டுவன் ஆயின்,**
**'என்முறை வருக' என்னான், கம்மென**
**எழுதரு பெரும்படை விலக்கி,**
**ஆண்டு நிற்கும் ஆண்தகை யன்னே."**

**(புறநானூறு, பா.292)**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

எனும் பா அமைகின்றது. போருக்குச் செல்லும் முன் மன்னன் அளிக்கும் பெருஞ்சோற்று விருந்தின் போது, வீரன் ஒருவன் தனக்கு முதலில் கள் தரவில்லை என்று கோபித்து வாளை உருவி நின்றான். அதைக் கண்டு சினந்த மற்றவர்களுக்குப் புலவர், "அவன் கள் குடிப்பதில் முந்துபவன் மட்டுமல்ல, போர்க்களத்திலும் எதிரிப்படையை முறியடிக்க முதல் ஆளாகச் சென்று நிற்பவன்" என அந்த வீரனின் மாண்பைப் போற்றி அறிவுரை கூறுவதாக இப்பாடல் அமைகின்றது.

**முடிவுரை**

போருக்கு முன்னும் பின்னும் பெருஞ்சோறளிக்கப்பெற்ற நிலையைப் புறநானூற்றின் வழி அறியலாகின்றது. பெருஞ்சோற்றின் மாண்பால் மன்னன் அடையாளப்படுத்தப் பெறுதலும், மறவன் போற்றப்பெறுதலும் புறநானூற்றில் காட்சிப்படுத்தப் பெறுகின்றது. மறவர்களின் மாண்பைக் கருதி சோறிடுதல் ஈகையாக முன்னிறுத்தப் பெறாமல் விருந்தோம்பலின் மாற்று வடிவமாகக் காட்டப்பெறுகின்றது. மறப் பண்புக்கு அரசர் அளிக்கும் அரச மரியாதையாக பெருஞ்சோற்று நிலை திகழ்கின்றது என்பது இவ்வாய்வின் வழி நிறுவப்பெறுகின்றது.

**துணைநின்றவை**

[1]. தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு

[2]. ச. வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம்